சாட்சி ஆஜர் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

**அ.சா.1 விஸ்வநாதன் த/பெ. வடிவேல்** வயது.61

சாட்சி மனுவின் பேரில் ஆஜராகி எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

எதிரியும் நானும் உறவினர் என்றால் சரிதான். எனக்கு எழுதப் படிக்கத் தெரியாது என்றாலும் கையொப்பம் மட்டும்தான் போட தெரியும் என்றாலும் சரிதான். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் நேரம் இருட்டான நேரம் என்றால் சுமார் மாலை 06.00 மணி இருக்கும். இருட்டான நேரம் என்பதால் அங்கு யார் இருந்தார்கள் என்று எனக்கு தெரியாது என்றால் தெரியும். சம்பவ இடத்தில் எனது மனைவி, சத்தியமூர்த்தி, ஆனந்தன், ஆகாஷ் ஆகியோர் இருந்தார்கள். எனது மகனும் எதிரியும் நண்பர்கள் என்றால் சரியல்ல. என்னை மருத்துவமனையில் என்னுடைய மகன், ஆனந்தன் ஆகியோர் இரவு 07.00 மணியளவில் சேர்த்தார்கள். அன்று இரவு 09.00 மணி அளவில் போலீசார் என்னை விசாரித்தார்கள். சம்பவம் குறித்து எனது மகன் போலீசாரிடம் கூறினார் என்றால் சரிதான். மருத்துவமனையில் போலீசார் எனது மகனிடம் கையொப்பம் வாங்கினார்கள் என்றால் சரிதான். நான் அப்போது மயக்க நிலையில் இருந்தேன். எதிரி என்னை அசிங்கமாக பேசியது மற்றும் கல்லால் தாக்கிய விவரத்தை எனது மகன் தான் போலீசாரிடம் கூறினார் என்றால் சரிதான். நான் மருத்துவமனையில் மூன்று நாட்கள் சிகிச்சையில் இருந்தேன். ஒரு வாரத்திற்குள்ளாகவே போலீசார் என்னை மீண்டும் விசாரித்தார்கள். எனது வீட்டின் அருகில் நிறைய வீடுகள் உள்ளது என்றால் சரிதான். எனது மகனுக்கும் எதிரிக்கும் உள்ள முன்விரோதத்தின் காரணமாக இந்த பொய்யான புகாரை அளித்துள்ளேன் என்றாலும் உண்மையில் சம்பவம் நடைபெறவில்லை என்றாலும் எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்பந்தமில்லை என்றாலும் சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் தேதியில் எதிரி சம்பவ இடத்தில் இல்லை என்றாலும் சரியல்ல.

**மறுவிசாரணை:– இல்லை**

Typed to my dictation in open Court, read over and interpreted to the Witness. Admitted and acknowledged by him/her to be Correct.

JUDICIAL MAGISTRATE NO.II

KOVENDHAN S

Digitally signed by KOVENDHAN S
DN: cn=KOVENDHAN S, ou=TIRUPPATHUR, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Location: TIRUPATHUR
Date: 2025.09.19 18:18:37 +0530

Judicial Magistrate No.II,

Tirupathur.